**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 47/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 8 | | Examined as : PW 7 | |
| Name | : மதியழகன் | Defence | : |
| Father Name | : ரெங்கநாதன் | Court | : |
| Village | : தலைமை காவலர், (ஓய்வு) | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 62/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 01.04.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (BNSS பிரிவு 355 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து கடந்த 31.05.2024 அன்று பணி ஓய்வு பெற்றேன். கடந்த 23.12.2022 ஆம் தேதி செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் நான் தலைமை காவலராக பணியில் இருந்தபோது ராமச்சந்திரன் த/பெ. கோபால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.442/2022, இதச பிரிவுகள் 452, 294(b), 323 & 4 of TNPHW Act ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை மேல் விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் எழுதியே எடுத்துவந்தார்கள்.

புகாரை போலிசார் தான் எழுதினார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த 8 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகாரை பெற்ற பிறகு எதிரியின் மனைவியை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அசா1 சொன்னது போல் எதிரி எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றாலும், எதிரியின் மீதான் முன்விரோதம் காரணமாக அசா1 கொடுத்த பொய்யான புகாரை சரவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கையை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.